# இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 1 இன் படி, ஒரு சொத்து அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்கிடையில் தேறக் கூடியதென எதிர்பார்க்கப்பட்டபோது நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், செஸ் நிதியைப்பயன்படுத்தி திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டதும் ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்கிடையில் தேறக் கூடியதென எதிர்பார்கக்ப்பட்டதுமான ரூபா 1,827 மில்லியன் திரண்ட தொகை நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 7 இன் படி பெறுமானத் தேய்விடக் கூடிய குத்தகைச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக் கொள்கை சொந்தமாக உள்ள பெறுமானத் தேய்வுக்குரிய சொத்துக்களுடன் மாற்றமின்றி இருக்க வேண்டும். எனினும், ஆணைக்குழுவிற்கு சொந்தமான மற்றும் குத்தகை மோட்டார் வாகனங்களிற்காக வேறுபாடான பெறுமானத்தேய்வு கொள்கைகள் பிரயோகிகப்பட்டிருந்தன. அதன் வினைவாக மோட்டார் வாகனங்களிற்கான பெறுமானத்தேய்வுச் செலவுகள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 540,500 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முன்னைய ஆண்டில் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட குத்தகை மோட்டார் வாகனங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்கள்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் ரூபா 3,800,000 தொகை கொண்ட வாகனங்களின் பெறுமதி மற்றும் அதற்கான திரண்ட பெறுமானத் தேய்வு என்பன கணக்குகளில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 628,884 தொகை கொண்ட பதிவேட்டுப் பொருட்களை பௌதிக் மெய்மையாய்வு அறிக்கைகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள். மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 8 (1) | நிதி ஆண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்குப் பிந்தாமல் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 14 (1) | ஆணைக்குழுவின் செயலாற்றலைக் காட்டும் மீளாய்வாண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்கள் சுற்றுநிரூபம்

| | |
|---|---|
| (i) அத்தியாயம் 4 இன் பிரிவு 4.2.2 | ஆணைக்குழு உண்மையான செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்காக அதன் கூட்டுத்திட்டம் மற்றும் பாதீடு என்பவற்றை பருவரீதியாக மீளாய்வு செய்ய வேண்டும் எனினும், செயலாற்றல் மீளாய்வு முறைமை எதுவும் ஆணைக்குழுவால் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் 7 இன் பிரிவு 7.2 | ஆணைக்குழு, சகல பிரதான செயற்பாடுகளை உள்ளடக்கிய தனது சொந்த முறைமைகள் கைநூலைக் கொண்டிருக்க வேண்டும். எனினும், முறைமைகள் கைநூல் எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் 9 இன் பிரிவு 9.12 | ஒரு பொது முயற்சியால் கைக் கொள்ளப்படும் நலன்புரித்திட்டமெதுவும் மொத்தம் பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றதாக இருக்க வேண்டும் என்ற போதிலும் ஆணைக்குழுவானது ஊழியர்களின் மருத்துவ மற்றும் காப்புறுதி நலன்புரித்திட்டத்திற்காக அவசியமான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆணைக்குழுவின் தலைவர் 2013 செப்தெம்பர் 13 இவ் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார். <br>“எஸ்ஈசீ அதிகாரச் சட்டத்தின் பிரிவு 43(2) இன் பிரகாரம் அலுவலகர்கள் மற்றும் பணியாட்கள் ஆணைக்குழுவால் முறையாக வேதனம் வழங்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். திறைசேரியின் முன்னாள் செயலாளரால் இணைக்கப்பட்ட வழிகாட்டல்களின் படி அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு உட்படாமல் பதவியணியினரை சேர்க்கவும் அவர்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களைத் தீர்மானிக்கவும் ஆணைக்குழுவிற்கு சுதந்திரமுள்ளதைக்காட்டி எஸ்ஈசிக்கு அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| | | வழங்கியிருந்தார்'' என்பதாகும் |
| (iii) | ஆத்தியாயம் 9 இன் பிரிவு 9.14 | மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான சகல விடயங்களினுடனான விதிகள் மற்றும் பிரமாணங்களை வழங்கும் மனிதவள முகாமைத்துவத்தில் ஒரு அத்தியாயத்துடன் நடைமுறைக் கைநூல் திறைசேரிச் செயலாளரின் ஒத்திசைவுடன் சேர்த்து சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும் ஆணைக்குழு இந்த வேண்டுதலுடன் இணங்கத் தவறியிருந்தது. |

(இ) மேற்படி இணங்காமைகளிற்கு மேலதிகமாக ஆணைக்குழுவானது அரசாங்க நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அரசாங்க சுற்றுநிருபங்கள், ஏனைய விதிகள் மற்றும் பிமாணங்களில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை பின்பற்றியிருக்கவில்லை எனினும், அரசாங்க விதிகள் மற்றும் பிரமாணங்களிலிருந்து விலகுவதற்காக வேண்டப்பட்ட அமைச்சரவையின் அங்கீகாரத்தை ஆணைக்குழு பெற்றிருக்கவில்லை. அதற்கு மேலாக 1989 இன் 36 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தில் ஆணைக்குழுவிற்கு விலக்களிப்பதற்கான அத்தகைய எவ்வித ஏற்பாடும் இருக்கவில்லை.

### 1.2.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மிகையூதியக் கொடுப்பளவிற்காக திறைசேரி அங்கீகாரத்தைப் பெறுமாறு பொது முயற்சிகளிற்கான குழு (சீஓபீஈ) அறிவுறுத்தியிருந்த போதிலும் அத்தகைய சொல்லப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது மிகையூதியக் கொடுப்பனவு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பதவியினருக்கான ஆண்டு மிகையூதியக் கொடுப்பனவு ரூபா 9,893,659 ஆக இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சுமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த தொழிற்பாட்டுச் செலவுகளிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 206,497,805 ஆன தேறிய பற்றாக்குறையை முன்னைய ஆண்டுடின் ரூபா 184,993,953 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம். ஆண்டிற்காக செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்காக ஏற்பட்ட ரூபா 12,024,832 ஆன மிகையை முன்னைய ஆண்டிற்கான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்களைக் கணக்கிற்கு எடுத்த பின்னரான அந்த ஆண்டிற்கான ரூபா 7401,390 மிகையுடன் ஒப்பிடலாம். ஆகையால் மிகையில் ரூபா 4,623,442 ஆன அதிகரிப்பை அது காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதசார் மீளாய்வு

தோழிற்பாட்டு செலவுகளை ஈடுசெய்வதற்கான ரூபா 218 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வருமானமாக இருந்த ரூபா 255 மில்லியனை முன்னைய ஆண்டின் ரூபா 192 மில்லியன் தொகையான செஸ் நிதியத்திலிருந்தான மாற்றங்கள் உட்பட ரூபா 235 மில்லியனுடன் ஒப்பிடலாம், இது மொத்த வருமானத்தின் 8.5 சதவீத அதிகரிப்பைக் பிரதி நிதித்துவப்படுத்துகிறது. அதே நேரம் மீளாய்வாண்டில் பங்குச் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமான ரூபா 228 மில்லியனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 225 மில்லியனுடன் ஒப்பிடலாம் அது 7 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினத்தின் மாறுதல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2012 | 2011 | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| செஸ் நிதியத்திலிருந்து மாற்றம் | 219 | 192 | 27 | 14 |
| தரகர் உத்தரவுப் பத்திர கட்டணங்கள், நிருவாக வரி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் | 21 | 29 | (08) | 27 |

| | | | | |
|---|---|---|---|---|
| நானாவித வருமானம் | 16 | 14 | 02 | 14 |
| ஆளுக்குரிய மற்றும் நிருவாகக் கிரயம் | 219 | 187 | 32 | 17 |
| மூலதன சந்தை அபிவிருத்தி செலவுகள் | 24 | 41 | (17) | 41 |
| ஆண்டிற்கான மேலதிகம் | 12 | 07 | 05 | 71 |

ஆளுக்குரிய கிரயம் முன்னைய ஆண்டிற்கான ரூபா 114 மில்லியனிலிருந்து 2012 ஆம் ஆண்டில் 23 சதவீதத்தால் ரூபா 140 மில்லியனாக அதிகரித்திருந்தது. எனினும், மூலதன சந்தை செலவுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 41 மில்லியனிலிருந்து 41 சதவீதத்தால் மீளாய்வாண்டில் ரூபா 24 மில்லியனாகக் குறைவடைந்திருந்தது.

## 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு தொழிற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பான முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| விகிதம் | நியம விகிதம் | 2012 | 2011 |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | தீர்மானிக்கப்பட வில்லை | 23:1 | 23:1 |
| விரைவு விகிதம் செஸ் நிதியம் நீங்கலாக | - மேற்படி - | 23:1 | 23:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 பங்குச் சந்தையின் செயலாற்றல்

| | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|
| மொத்தப் புரள்வு(ரூபா. பில்லியன்) | 214 | 546 | 570 | 142 | 110 |
| உள்நாடு (ரூபா. பில்லியன்) | 161 | 487 | 465 | 99 | 51 |
| வெளிநாடு (ரூபா. பில்லியன்) | 53 | 59 | 105 | 43 | 59 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பங்குத் தொகை மில்லியனில் பங்குகளின் எண்ணிக்கை) | 9,691 | 24,544 | 18,489 | 4,763 | 3,155 |
| நாளாந்த சராசரி புரள்வு (ரூபா. பில்லியன்) | 884 | 2,285 | 2,396 | 593 | 464 |

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்கான நாட்டின் பங்குச் சந்தை தொடர்பான தகவல்கள் சில பின்வருமாறிருந்தன.

2009 ஆம் ஆண்டில் சிவில் யுத்த நிலைமை முடிவுற்றதும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது பங்குச் சந்தையின் புரள்வு ரூபா 570 பில்லியன் பங்குப் புரள்வைப் பதிவு செய்யும் 301 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தது. எனினும், அந்தப் போக்கு 2011 இல் ரூபா 546 பில்லியனிலிருந்து 2012 இல் ரூபா 214 பில்லியனாக 60 சதவீதத்தால் குறைந்து மீளாய்வாண்டில் அந்தப் போக்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைக் காட்டியது. மேலும், பங்குச் சந்தையில் பங்கு கையாளும் தொகை 2011 இல் 24,544 மில்லியன் பங்குகளிலிருந்து 2012 இல் 9,691 மில்லியன் பங்குகளாக 61 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 3.1.2 மூலதனச் சந்தை அபிவிருத்தி நடவடிக்கைகள்

கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத்திட்டம் என்பவற்றில் குறிக்கப்பட்ட இலக்குகளின் எய்துகை தொடர்பாகப் கணக்காய்வில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மூலதனச் சந்தை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி

i. ஆணைக்குழுவானது மூலதனம் அல்லது கடன் பிணையங்களை வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு சொந்தமான முயற்சிகள் (எஸ்ஏஈஎஸ்) மற்றும் பாரிய கூட்டுத்தாபனங்களை உற்சாகப்படுத்துவதற்கும் - பிணையங்கள் பரிவர்த்தனை (சீஎஸ்ஈ) மற்றும் கம்பனிகள் பதிவாளர் என்போருடன் சேர்த்து கூடிய வழங்கலை உற்சாகப்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளிற்கான வழங்கும் செயன்முறையை லேசாக்குவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் (சீஎஸ்ஈ) மூலதனச் சந்தை காட்ச்சிப்படுத்தலை அதிகரிப்பதற்கான பென்சன் நிதிகளை உற்சாகப்படுத்தவதற்கு 2011 இல் ஓய்வூதிய வழங்கல் நிதிய நம்பிக்கைப் பொறுப்பாளர்களிற்கான ஒரு மகா நாட்டைச் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அது 2013 ஓகத்து வரையிற் கூட நடாத்தப்பட்டிருக்கவில்லை.

iii. கடன் வியாபார முறைமையை (டிஈஎஸ்) உற்சாகப்படுத்துவதனூடாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையுடன் இணைக்கப்படுவதன் மூலம் முறிச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் டிஈஎல்எஸ் முறைமையை மாற்றுவதற்கு சீஎஸ்ஈக்கு 2013 ஓகத்து 31 வரை பிரதிநிதித்துவம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

iv. ஆணைக்குழுவானது 2011 இன் முதற் காலாண்டில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் விரைவாக்கலை பூரணப்படுத்துவதற்காக மூலதனச் சந்தை சட்டமைப்பை முன்னேற்றுவதற்கான வசதியளிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்த வேலை 2013 ஓகத்து இறுதி வரையிற் கூட முடிவாக்கப்பட்டிருக்கவில்லை.

v. ஆணைக்குழுவானது ஒழுங்குபடுத்தும் எல்லை வகுத்தலைப் பலப்படுத்துவதற்காக முதலீட்டு வங்கிகளை ஒழுங்குபடுத்துவதற்கு திட்டமிட்டிருந்ததுடன் எஸ்சீஈ அதிகாரச் சட்டத்தை திருத்தும் வரை அந்த வேலையை முடிப்பது தாமதப்பட்டிருந்தது. மேலும், தொழிற் திணைக்களத்தினால் எஸ்ஈசீ யில் பதிவு செய்யப்பட்ட முதலீட்டு முகாமையாளரின் சேவையைப் பெறுவதற்கான சொத்து அடிப்படை ரூபா 500 மில்லியனுடன் தனியார் ஓய்வூதிய நிதியங்களிற்கான சட்ட அதிகாரத்திற்கான பிரேரணை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இன்னும் கூடிய பொருத்தமான காலத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதை மேற்கொள்வதற்காக எஸ்ஈசீ ஆல் அது தாமதமாக்கப்பட்டிருந்தது.

vi. கொழும்பு பங்கு பரிவர்த்தனையுடன் அகற்றும் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதலை 2010 இறுதியில் நிறைவு செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் இரண்டரை ஆண்டுகள் கடந்திருக்கும் 2013 ஓகத்துவரையிற் கூட அது நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கூட்டு விவகாரங்கள்**

-------------------------------

பட்டியல்ப்படுத்தப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்களினால் செய்யப்பட்ட வேலைகளை சுதந்திரமாக மீளாய்வு செய்வதற்கான செயன் முறையை

ஆரம்பிப்பதற்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்கானிப்பு சபையுடன் (எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ) இணைந்து ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேலை பதவியணி பற்றாக்குறை காரணமாக மேலும், தாமதப்பட்டிருந்தது. 2013 செப்தெம்பர் 13 இல் ஆணைக்குழுவின் தலைவர் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார்.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்கானிப்புச் சபை அந்த திட்டம் தொடர்பாக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவடன் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் ஒழுங்குபடுத்தும் தேவைகளை ஈடுசெய்வதற்கும் சாதகமாயிருக்கும் எஸ்ஈசீ வெளிவாரி கணக்காய்வாளர்களின் குழு ஒன்றை உருவாக்குதல் அல்லது பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வாளர்களை பதிவு செய்வதற்கான வழிகாட்டல்களை தயாரிப்பதில் சாத்தியத்தன்மையை மீளாய்வு செய்திருந்தது. என்பதாகும்.

**(இ) விசாரனைகள்**

---

தகவல் தொழில் நுட்ப (ஐரீ) உள்ளீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் விசாரனைகளில் தரவு அடிப்படையின் முன்னேற்றங்கள் கூட்டுத்திட்டத்தின்படி, ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் தலைவர் 2013 செப்தெம்பர் 13 இல் பின்வருமாறு அறிவித்திருந்தார். ‘‘பாதீட்டு வேண்டுகைகள் நிதி மற்றும் நிருவாக பிரிவிற் பொறுப்பளிக்கப்பட்டதுடன் அவசியமான கலந்துரையாடல்கள் தகவல் தொழில்நுட்ப முகாமையாளருடன் நடாத்தப்பட்டன. அதன் காலப்பகுதி 2014 இன் முதலாம் காலாண்டிற்கு நீடிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

**(ஈ) மேற்பார்வை.**

---

அலகு நம்பிக்கையின் முகாமைத்துவ கம்பனிகளிற்கான ஈ - கோவைப்படுத்தலின் அமுலாக்கம் மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கணக்கானிப்புச் சபை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (எஸ்எல்ஏஏஸ்/எம்பீ/ஐசீஏஎஸ்எல்) என்பவற்றின் உதவியுடன் உத்தரவு பெற்ற பதிவு செய்யப்பட்ட உரிமங்களின் வெளிவாசி கணக்காய்வாளர்களுடன் அறிக்கையிடல் சட்டத்தை அபிவிருத்தி செய்தல் என்பன மூன்றாண்டுகளிற்கு மேலாக தாமதப்படுத்தியிருந்தது.

**(உ) கடும் மேற்பார்வை**

2010 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்ட பணிப்பாளர்கள் மற்றும் உள்ளகத்தவர்களிற்கான தரவு அடிப்படையின் நடைமுறைப்படுத்தல் மற்றும் கூட்டிணைத்தல் என்பன 2013 ஓகத்து வரையிற் கூட பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவின் தலைவர் 2013 செப்தெம்பர் 13 இன் பின்வருமாறு எனக்கு அறிவித்திருந்தார். பட்டியலப்படுத்தப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்கள் அவர்களின் தொடர்புட்ட தரப்பினரின் பிரத்தியேக தகவல்களிற்கான சாதாரண வேண்டுகையாக எஸ்ஈசீக்கு இருந்தமையால் இது சாத்தியமற்றதென்று கருதப்பட்டது. இந்தப் புள்ளிக்கு அப்பால் வேண்டப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு சகல பணிப்பாளர்களையும் எஸ்ஈசீ கேட்டுக்கொள்ள முடியும் என்பதன் கீழ் எதுவித சட்ட அடிப்படையையும் எஸ்ஈசீக்கு இருக்கவில்லை. எஸ்ஈசீ புதிய கம்பனிகளைப் பட்டியல்ப்படுத்துவதற்கு கவர்ச்சியளிக்க முயற்சிக்கும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் (சீஎஸ்ஈ) அபவிருத்தியின் நடைமுறைச் சமயத்தில் இது புதிய பட்டியல்படுத்தல்களிற்கான இன்னொரு தடையாக அல்லது வேலியாக தெரிந்துகொள்ளப்பட வேண்டும். பணிப்பாளர்கள் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் சபைகளில் சேவையாற்றும் மக்களிற்கான எச்சரிக்கையாகவும் இது இருக்க வேண்டும். நடைமுறை வீழ்ச்சிப் போக்கிலிருந்து மீண்டெழுவதிலிருந்து சீஎஸ்ஈ ஐ தடுக்கும் எதிர்மறைக் காரணிகளாகவும் இது வர்ணிக்கப்படலாம். இந்த நிலைமையில் இது கைவிடப்பட்டதுடன் அண்மைய எதிர்காலத்தில் இது மீள பிரவேசம் செய்யப்படமாட்டாது என்பதாகும்''

**(ஊ) சட்டம் மற்றும் சட்ட அமுலாக்கல்**

(i) புதிய கையேற்றல் மற்றம் இணைத்தல் விதிகோவையை இறுதியாக்ததல் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் தாமதங்களை நீக்குவதற்கு இயலக்கூடிய சட்ட எல்லைகளை நிறுவுதல் மற்றம் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்படும். திருத்தங்கள் என்பன இன்னமும் வரைவு மட்டத்திலேயே இருந்ததுடன் குறிப்பிடத்தக்களவு தாமதத்தை பதிவு செய்திருந்தது.

(ii) சந்தை மத்தியஸ்த கடன் தரப்படுத்தும் முகவர்கள் முதலீட்டு முகாமையாளர்கள், பொறுப்பேற்பாளர் மற்றும் இலாபம்

வழங்குனர்கள் என்போருக்கான ஈ- கோவைப்படுத்தலின் பிரேரணைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனத்திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ தகவல் முறைமையின் தரம் மற்றும் நம்பகத்தன்மை.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்களில் கணணி வன்பொருள் மற்றும் மென்பொருளை கையேற்பதற்கு ரூபா 72.4 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவின் தகவல் வேண்டுகைகள் மற்றும் கட்டுப்பாட்டு வேண்டுகைகள் இனங்கண்ட பின்னர் பொருத்தமான முறைமை மற்றும் தகவல் தொழில்நுட்பக் கொள்கைகள் எதுவும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் படி, விலை மோசடிகள், உள்ளக / தொடர்புபட்ட தரப்பினர் வியாபாரங்கள், தரகர்களின் ஒழுங்கற்ற நடத்தைகள் என்றவாறான மீறல்களைக் குறைப்பதன் நோக்கில் கண்டுபிடித்த குற்றங்களிற்கெதிராக நேரகாலத்துடன் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எனினும், மீளாய்வாண்டில் மேற்பார்வை பிரிவு மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனையூடாக இனங்கானப்பட்ட 54 வழக்குகள் உட்பட கடந்த மூன்றாண்டுகளில் ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட 147 வழக்குகளில் 40 வழக்குகள் மாத்திரம் கடின மேற்பார்வை புலனாய்வுக் குழுவினால் மேலதிக விசாரணைகளிற்காக உத்தரவாதப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த பதிலின்படி அதில் 2013 ஓகத்து இறுதியளவில் 25 விசாரனைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 11 கோவைகள் மூடப்பட்டன. எனினும், விசாரனை செயன் முறைகளில் குறிப்பாக குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இரண்டு உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களின் விற்பனையிலிருந்தான ரூபா 3,772,362 தொகை இலாபம் ஆணைக்குழுவின் வருமானமாகக் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. அத்துடன் வேண்டப்பட்ட அமைச்சரவையின் அங்கீகாரம் தனிப்பட்ட ரீதியில் அந்த உத்தியோகத்தர்களிற்கு இலாபத்தை மாற்றுவதற்காகப் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

ஆணைக்குழு கொள்வனவுகளை மேற்கொண்ட போது தேவையான வரையறைகள் பகுப்பாய்வு தெரிவு கொள்வனவு கட்டங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன கேள்வி வழிகாட்டல்களின்படி அதனால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.6 மனிதவளங்கள் (எச்ஆர்) முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதன் மூலம் எச்ஆர் முகாமைத்துவம் தொடர்பான ஒரு எச்ஆர் திட்டம் மற்றும் நடைமுறைக் கைநூல் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மனித வளங்கள் தகவல் முறைமையை அறியப்படுத்துவதற்காக கூட்டுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளை அமுலாக்குவதற்கு பயனுறுதி மிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயலாற்றல் பகுப்பாய்வு முறைமையின் ஒரு பகுதியாக ஆண்டு மொத்த இழப்பீட்டு மீளாய்வு, மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, 7 சேவை வகுதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆணைக்குழுவின் ஊழியர்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் முறையே 82 மற்றும் 72 ஆக இருந்தன. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய படிகளிற்காக ஆணைக்குழுவினால் முறையே ரூபா 140 மில்லியன் மற்றும் ரூபா 114 மில்லியன் தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. அதனால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான ஒரு ஊழியருக்கான கிரயம் முறையே ரூபா 1711 110 மற்றும் ரூபா 1583 647 ஆக இருந்தமையை அது காட்டுகின்றது.

**3.7 வாகனங்களின் பயன்பாடு**

(அ) கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் 06 வாகனங்களிற்கான எரிபொருள், பராமரிப்பு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 1,747,453 தொகை செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பிரயாணச் செயத்தூரம் 66,384 கீ.மீ ஆகும். அது மீளாய்வாண்டில் பிரயாணம் செய்த ஒரு கி.மீ இற்கான கிரயம் ருபா 26.32 ஆக இருந்ததைக் காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் பணிப்பாளர்களிற்கு எரிபொருள் செலவுகள் மற்றும் வாகனங்களின் மீளளிப்பிற்காக ரூபா 8,621,638 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4. கணக்குப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டுத்திட்டம்**

2010 தொடக்கம் 2012 வரைக்குமான ஆணைக்குழுவிற்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேற்படி திட்டத்தை திருத்தி 2012 தொடக்கம் 2014 வரையிலான காலத்திற்காக மீளாய்வாண்டை உள்ளடக்கி ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாணடில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்ட பாரிய நடவடிக்ககைகளில் சில அமுலாகக்ப்பட்டிருக்கவில்லை.

**4.2 நடவடிக்கைத்திட்டம்**

மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்ட ஆண்டு இலக்குகளை குறிப்பிடாது நடவடிக்கைத்திட்டம் கூட்டுத்திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

**4.3 உள்ளகக் கணக்காய்வுப் பணிகள்**

ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் ஒரு தனியார் கணக்காய்வு நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருந்தது. எனினும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதியாரச்சட்டத்தின் 13(5)(டி) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு திட்டம் கணக்காய்வாளர் ததலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டில் மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்திற்கான கொள்கையை அறிமுகப்படுத்தப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டது. எனினும், தகவல் தொழில் நுட்பத்திற்கான கொள்கை 2013 மே இறதிவரை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 கொள்வனவுத் திட்டம்

ஆணைக்குழுவிற்கு வேண்டப்பட்ட கொள்வனவுகளை பகுப்பாய்வு செய்து ஒரு கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதனத் தன்மையான ரூபா 11.1 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், மூலதன செலவினத்திற்கான விபரமான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையானவற்றிக்குமிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரமான எனது விரிவான அறிக்கையின் மூலம் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீடு

(ஆ) மாதாந்த வங்கி கணக்கிணக்கங்கள் தயாரித்தல்

(இ) மனிதவள முகாமைத்துவம்

(ஈ) கொள்வனவுகள்

(உ) கணக்கீடு

(ஊ) தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவம்